1984 மார்ச் 26]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டுகள் அல்லது ஐம்பது புள்ளிகள் உயர்ந்தால் குறைந்த பட்சக் கூலியைத் திருத்தியமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். 1982 நவம்பரில் விலைவாசி 496 ஆகவும், 1983 டிசம்பரில் 559 ஆகவும் இருக்கிறது. எனவே, இப்படி ஐம்பது புள்ளிகளுக்கு மேலே உயர்ந்திருப்பதால் இதை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுதான் சொன்னேன், கூடுமானவரையில் இதையும் பின் பற்றிச் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம் என்று.

குடவாசல் ஒன்றியப் பகுதியிலுள்ள ஊர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

454 —*(வினா எண். 18087) திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் விளாகம், நல்லிச்சேரி, செகந்நாதபுரம், பல்லவநத்தம், அபிசேகமங்கலம், கடகம்பாடி, நெம்மேலி, அதம்பாவூர், அதம்பாவூர்ப்படுகை, தேதியூர், வில்லியநல்லூர் ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர் உப்பு நீராக உள்ளதால் நல்ல குடிதண்ணீர் வழங்கவேண்டி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட அனைத்துச் சிற்றூர்களுக்கும் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடகம்பாடி நீங்கலாக மற்ற அனைத்துச் சிற்றூர்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. கடகம்பாடியில் குடிக்கத் தகுதியான நீர் ஏற்கெனவே உள்ளது.

தாரமங்கலம் பேரூராட்சியில் குடிநீரை விநியோகம் செய்ய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.

455 —*(வினா எண். 18208) திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் பேரூராட்சியில் குடிநீரைச் சேமித்து விநியோகம் செய்ய ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேட்டூர் அணையிலிருந்து சேலம் நகருக்குக் குடிதண்ணீரை எடுத்துச்செல்லும் வழியில் தாரமங்கலத்திற்கும் அந்தத் தண்ணீர் வினியோகிக்கப்பட்டு வருகிறது. கடந்த முப்பதாண்டுக் காலமாக அப்படி அந்தத் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தாலும் ஒரு மணி நேரம்தான் காவேரி நீர் தாரமங்கலத்திற்கு விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாகக் கூடுதலான தண்ணீர் வசதி தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இப்பொழுது நேரடியாக விநியோகிக்கப்படுகின்ற அந்த முறையை மாற்றி, ஒரு ஓவர் ஹெட் டேங்க் கட்டி அதில் தண்ணீரைத் தேக்குவதன் மூலம் குடிதண்ணீரை ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் கூடுதலாக விநியோகிக்கலாம். ஆகவே, அந்தப் பகுதியின் குடிதண்ணீர்ப் பிரச்னையைப் போக்கும் வகையில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் இப்பஞ்சாயத்திற்கு விநியோகிக்கப்பட்டு வரும் குடிநீர், பொதுக் குழாய்கள் மூலமாகவும், வீட்டு இணைப்புகள் மூலமாகவும், எந்தவித தடங்கலும் இன்றி விநியோகிக்கப்பட்டு வருவதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் உத்தேசம் இப்பஞ்சாயத்தால் கைவிடப்பட்டு விட்டது. எனினும், உலக வங்கி கடனுதவித் திட்டத்தின்கீழ் சேலம் குடிநீர்த் திட்டம் அபிவிருத்தியடைந்த பின் தாரமங்கலம் பஞ்சாயத்திற்கு அதிக அளவு குடிநீர் வழங்க இயலும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கொடுக்கப்படுகின்ற வரையில் தற்போது உள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூடுதலாகக் குழாய்க் கிணறுகளை அமைத்துக் தருவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பஞ்சாயத்தால் பெறப்படும் நீர் 41 பொதுக் குழாய்கள் மூலமாவும், வீட்டு இணைப்புகள் மூலமாகவும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இடையிலே, அதிகப்படுத்துவதற்கு வேண்டிய ஆலோசனை இப்பொழுது அரசிடத்தில் இல்லை.

1984 மார்ச் 26]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலிருந்து தாரமங்கலம், ஓமலூர், சூரமங்கலம், ஆத்தூர் வரையில் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ? அதன் மதிப்பீடு எவ்வளவு? எப்பொழுது அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் தரப்படும்.

வேதாரண்யம் ஒன்றியப் பகுதிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

456 —*(வினா எண் 19193) **திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் ஒன்றியத்திற்குக் குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது அத்திட்டம் நிறைவேற்றப்படும்?

(ஈ) இத்துடன் வேறு பகுதிகள் ஏதும் இணைக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) நடந்து கொண்டிருக்கும் ஆய்வு வேலைகள் முடிந்த பின்னரே மதிப்பீடு நிர்ணயம் செய்ய முடியும்.

(இ) திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப் பட்டதும், செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(ஈ) இத் திட்டத்தில் வேதாரண்யம், ஒன்றியத்திலுள்ள 216 குடியிருப்புகளும் சேர்க்கப்பட்டு தண்ணீர் வழங்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் இரண்டாவது கட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஊராட்சி ஒன்றியம் அது. எனவே, அங்கே நிலத்தடி நீர் இல்லாத காரணத்தால், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, வெளியிடங்களிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற திட்டம் பற்றி ஆய்வு நடப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அந்த வேலைகளை விரைவில் முடித்து குடிதண்ணீர் வழங்குவதற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிரச்சினையின் முக்கியத்துவத்தையும், கொடுக்கப்படக்கூடிய குடியிருப்புக்களின் எண்ணிக்கை அதிக